Name of the Newspaper: DINAKARAN Date: 9-1-18

## சென்னையில் ₹79,962 கோடி செலவில்

# மெட்ரோ ரயில் திட்டம் மேலும் மூன்று வழித்தடத்தில் செயல்படுத்தப்படும்

## சட்டப்பேரவையில் கவர்னர் உரையில் தகவல்



சட்டப்பேரவையில் கவர்னர் பன்வாரிலால் புரோகித் உரையாற்றுகிறார்.

சென்னை, ஜன. 9: சென்னையில் ரூ.79,962 கோடி செலவில் மேலும் 3 வழித்தடத்தில் மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் கவர்னர் பன்வாரிலால் புரோகித் ஆற்றிய உரையில் கூறியிருப்பதாவது:

- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதற்கட்டத்தில் மீதமுள்ள சுரங்க வழித்தடங்களும் 2018ம் ஆண்டின் இறுதிக்குள் பயன்பாட்டிற்கு வரும். வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர்/விம்கோ நகர் வரையிலான 9 கிலோ மீட்டர் நீளத்திற்கான முதற்கட்டத்தின் விரிவாக்கப் பணிகளும் விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மேலும் மூன்று மெட்ரோ ரயில் வழித்தடங்களை 107.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஏற்படுத்துவதற்காக, 79,962 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டத்திற்கு அயல்நாட்டு முகமையின் நிதியுதவியைப் பெறுவதற்காக மாநில அரசு அனுமதி வழங்கி மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது. இந்நிலையில்இரண்டாம் கட்ட திட்டப்பணிகளுக்கு விரைவில் ஒப்புதலை மத்திய அரசு வழங்கவேண்டும்.
- தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் நடைமுறைகளை மேலும் எளிதாக்குவதற்கு அரசு உறுதியாக உள்ளது. முதற்கட்டமாக, 2017ம் ஆண்டு, அக்டோபர் 28ம் தேதி '2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் அவசரச் சட்டம்' பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த அவசரச் சட்டத்தினை, சட்டமாக்குவதற்கான சட்ட முன்வடிவு, இந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. குறிப்பிட்ட காலத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிப்பதற்கும், முதலீட்டாளர்களுக்கான குறைதீர்ப்பு அமைப்பாகச் செயல்படுவதற்கும் ஒரு உயர்மட்டக் குழுவையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.
- சென்னை உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், 2.42லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொழில் முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், 96,341 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய, ரூ.62,738 கோடி மதிப்பீட்டிலான 61 திட்டங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. முதலீட்டாளர்கள் விரைவில் அனுமதியைப் பெற்று மீதமுள்ள திட்டங்களையும் செயல்படுத்த, 'தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்' மூலம் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
- புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக, 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்துடன்' இணைந்து, தனியார் முதலீட்டாளர்களுக்கும், தொழில்துறை அமைப்புகளுக்கும் அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கும்.
- 'மகளிர் சுகாதாரத் திட்டம்', 'அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்' மற்றும் 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' ஆகிய புதுமையான முன்னோடித் திட்டங்கள் அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.
- மாநிலத்தின் நலனையும், மாணவர்கள் மற்றும் மருத்துவர்களின் நலனையும் காக்கும் வகையில் அரசு ஏற்கனவே முன்வைத்துள்ள கருத்துகளின் அடிப்படையில், மருத்துவத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தேசிய மருத்துவ ஆணையச் சட்ட முன்வடிவில் தகுந்த மாற்றங்களைக் மத்திய அரசு கொண்டுவர வேண்டும்.
- பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளிக் கல்வி எளிதாகக் கிடைக்கச் செய்யவும், நூறு சதவீத பள்ளிச் சேர்க்கையை உறுதி செய்யும்.
- மாநிலத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் உயர்கல்வி எளிதிலும், குறைந்த செலவிலும் கிடைக்கச் செய்ய, இந்த அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் பலனாக, தேசிய அளவில் தமிழ்நாட்டில்தான் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ளது.
- திருமண உதவித் திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டங்களின் மூலமாக வழங்கப்படும் உதவித்தொகைகள், தொட்டில் குழந்தைத் திட்டம், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு விடுதி வளாகங்கள் போன்ற திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்' கீழ் பள்ளி செல்லும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவையை, 'ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்' மூலமாக அரசு நிறைவேற்றி வருகிறது.

- ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.
- கடுமையான நிதிநிலை நிலவி வரும்போதும், அரசுப் பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, 2017ம் ஆண்டைய ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு ஆண்டிற்கு 14,719 கோடி ரூபாய் கூடுதல் செலவில் ஏற்கனவே ஊதிய திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஊதியத் திருத்தங்களில் கோரிக்கைகள் பல்வேறு தரப்புகளிடமிருந்து வந்த வண்ணம் உள்ளன. இந்தக் குறைகளையும் கோரிக்கைகளையும் பரிசீலிக்க அரசு ஒரு குழுவை அமைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழில் பேசிய கவர்னர்

தமிழக சட்டப்பேரவையில் நேற்று தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் உரையாற்றினார். அவர் ஆங்கிலத்தில் உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டு, அதற்காக ஆங்கில புத்தகமும் தயாராக இருந்தது. ஆனால், கவர்னர் பேரவையில் பேச தொடங்கியதும் முதலில் 'வணக்கம்" என்றும், 'அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்' என்று தமிழில் தனது பேச்சை தொடங்கினார். கவர்னர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் உள்பட திமுக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் எழுந்து நின்று குரல் எழுப்பினர். அப்போது, 'உட்காருங்கள்... உட்காருங்கள்" என்று தமிழில் கவர்னர் கூறினார். இதைக்கேட்ட ஆளுங்கட்சியான அதிமுக எம்எல்ஏக்கள் மேஜையை தட்டி வரவேற்றனர். பின்னர் கவர்னர் உரையை படித்து முடித்ததும், 'அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள்" என்று தமிழில் கூறி அமர்ந்தார். 50 பக்கம் கொண்ட கவர்னர் உரையை 50 நிமிடத்தில் கவர்னர் படித்து முடித்தார்.

### பெண்களுக்கு இருசக்கர வாகன மானியம் 25,000 ஆக உயர்வு

விரைவில் தொடங்கப்பட உள்ள, 'பெண்களுக்கு இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின்' கீழ், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உதவித்தொகையின் உச்ச வரம்பு, 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது.